# கிறிஸ்தவ கீர்த்தனைகளும், தமிழ் பண்பாடும்

இன்றைக்கு பெரும்பாலான தேவாலயங்களிலும், கூடுகைகளிலும் கீர்த்தனைகள் பாடுவது இல்லையென்றே சொல்லலாம். எப்படி நமது சாம்பார்களில் கறிவேப்பில்லை பயன்படுத்தப்படுகிறதோ, அப்படிதான் தேவலாயங்களில் கீர்த்தனைகள் பாடப்படுகிறது.

அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்கு சாந்தமானவர்களோ அவரை ஏற்றிக் கொள்ளவில்லை. (யோவான்1: 11) என்பதை போல நாமும், நமது காலாச்சாரத்தில் நமது மொழியில் இயற்றப்பட்ட பாடல்களை பாடுவதை முற்றிலுமாய் தவிர்த்து மேற்கிந்திய இசையில் தமிழ் வார்த்தைகளால் பாடுவதை பெருமையாகக் கருதி வருகிறோம். ஆனால் ழ.ஆ.பாப்லி - மிஷனரி முதன் முதலாக, பாடல்களை தொகுத்தவர்.

தொழுவத்துக்கு வெளியே உள்ள ஆட்களை குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்? நமது பிள்ளைகளை பட்டினி போட்டுவிட்டு, பக்கத்து வீட்டு பிள்ளைக்கு உணவளிப்பது தவறு. பாமாலை பாடலாம். ஆனால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, வழிபாடு முழுவதும் பாமாலையே பாடிக்கொண்டு இருக்கிறோம்.

கீர்த்தனைகளில் சிறப்பு என்ன? பொருள் என்ன? ஆழம் என்ன? என்று புரிந்தால் தான் உணர்வு பூர்வமாக பாடமுடியும். புரியாமல் தான் பாடாமல் இருக்கிறோம்.

இறையடியார்கள் பல்வேறு சூழலில் பாடினார்கள். அது இவர்களின் ஆழ்ந்த கிறிஸ்தவ அனுபவம், முறையான கர்நாடக சங்கீத அறிவு, வேதத்தை படித்த அறிவு, இலக்கண, இலக்கியம் ஞானம் ஆகியவை நம்மை பிரம்மிக்க வைக்கிறது.

கீர்த்தனைகளை ஆழ்ந்து பார்த்தால் இசை ஞானம், சொல்லாட்சி, வேத ஆராய்ச்சிக்கான பாடம், தமிழ் மரபுகள், பக்தி உணர்ச்சி, சந்தோஷ உணர்ச்சி போன்றவற்றையும் நாம் காணமுடியும்.

ஒவ்வொரு கீர்த்தனைகளையும் ஆழ்ந்து பார்த்தால் 3 பிரசங்கமே பண்ணலாம். அத்தனை ஆழமான சத்தியங்கள் உண்டு. நமது மண்ணின் இசையை, இயல்பான இசையை ரசிக்க வேண்டும். பாமாலை என்பது ஆங்கில வார்த்தையை தமிழில், மொழி பெயர்த்து ஆங்கில இசையில் பாடுகிறோம்.

எங்கே சுமந்து போகிறீர் என்ற பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயாத்து தமிழ் இசையை கொண்டு பாடினால் எப்படியிருக்கும்?

கீர்த்தனையில் கீழ்வரும் செல்வங்கள் உண்டு. அ.
**பக்திச் செல்வம்** - பக்தி உணர்வு வெளிப்படும் பாடல்கள் திருப்புகழ் 3 பாடல்கள் ஆகமங்கள் புகழ் வேதா நமோ.... (பாடல்), சத்தாய் நிற்களமாய் - பாட்டில் உறவுகளை குறித்து கவிஞர் சொல்கிறார்.

ஆ. **தமிழ் மரபுச் செல்வம்** சரணம் நம்பினேன் இயேசு நாதா – கடவுளை எப்படி வணங்க வேண்டும் என்ற இலக்கணம் இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

இ. **கவிதைச் செல்வம்** இத்திரை மீதினில்..., தோத்திரம் செய்வேனே என்ற பாடல்களில் வரும் வரிகளே இதற்கு உதாரணம்.

ஈ. **இசைச் செல்வம்** கர்நாடக சங்கீதத்தில் உள்ள ராகங்களை கொண்டே எல்லா பாடல்களும் இயற்றப்பட்டுள்ளன.

உ. **திருமறைச் செல்வம்** எனது கர்த்தரின் ராஜரீகம் எப்போ வருமோ - இப்பாடல் ஆயிரம் வருட அரசாட்சியை நம் கண்முன்னே கொண்டுவரும்.

ஊ. **திருச்சபை முறைச் செல்வம்** ‘‘என்னை ஜீவ பலியாய்’’ திடப்படுத்துதல் நேரத்தில் பாட வேண்டிய பாடல்.

எ. **அறிநெறிச் செல்வம்** ‘‘எங்கும் புகழ் இயேசு ராஜனுக்கே’’ பாடல் இதற்கு உதாரணம்

துதி, நன்றியுணர்வு, பிழையுணர்தல், விண்ணப்பித்தல் போன்ற உணர்வுகளை கொண்ட கீர்த்தனைகள் ஏராளம்.

இப்படி செல்வங்கள் நிறைந்த கீர்த்தனை பாடுவோம். நமது பண்பாடு, கலாச்சாரத்தை போன்றவற்றிற்க்கு உயிர் மீட்டுக் கொடுப்போம்.

பேரா மைக்கேல் ஃபராடே பேசக்கேட்டவர்
**த.ஸ்டீபன்** நூலகம்
(பிஷப் அப்பாசாமி கல்லூரியில் நடைபெற்ற கீர்த்தனைகள் குறித்த கருத்தரங்களில் பேசிய உரையின் தொகுப்பு)